வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள தரம் 05ஐச் சேர்ந்த 4872 மாணவர்களுக்கு தேசம்நெற் (www.thesamnet.co.uk), சிந்தனைவட்டம் இணைந்து வழங்கும் அன்பளிப்பு

# புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்

# தொகுதி 02

புன்னியாமீன்,

மஸீதா புன்னியாமீன்



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை
எழுதவுள்ள மாணவர்களுக்கான

# 2009

# புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்

## தொகுதி 2


இணை நூலாசிரியர்கள்

**புன்னியாமீன்**

**மஸீதா புன்னியாமீன்**



*வெளியீடு:*
சிந்தனைவட்டம்
த.பெ. இலக்கம் 01
பொல்கொல்ல.
Tel : 081 2493892 / 081 - 2493746
Fax : 081 - 2493746
E-mail : pmpuniyameen@yahoo.com

**சிந்தனை வட்டத்தின் 303 வது வெளியீடு**

## நூல் விபரம்

*பெயர்:*
புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்
தொகுதி - 01

*இணை நூலாசிரியர்கள்*
புன்னியாமீன் / மஸீதா புன்னியாமீன்

*முதலாம் பதிப்பு:*
ஏப்ரல் -2009

*வெளியீடு:*
சிந்தனை வட்டம்

*அச்சுப் பதிப்பு:*
சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு
இல. 14, உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை

**ISBN: 978 - 955 - 1779 - 22- 1**

**Rs:- 97.50**

**Copy Right 2009 - by Mazeeda Puniyameen**

All Right Reserved. No Part of publication may be produced or unilised, stored in a retrieval system, of transmitted in any from or by any means, electronic, mechanical. Photocopying, recording or otherwise, without the prior written permissin of the publishers.

## தமிழ் எழுத்துக்கள்

- உயிர் எழுத்துக்கள்
  - குற்றெழுத்து
    குறில்
  - நெட்டெழுத்து
    நெடில்
- மெய் எழுத்துக்கள்
  - வல்லினம்
  - மெல்லினம்
  - இடையினம்

### (1) உயிர் எழுத்துக்கள் 12

அ, ஆ, இ, ஈ, உ, ஊ,
எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

### (2) மெய் எழுத்துக்கள் 18

க், ங், ச:, ஞ், ட், ண், த், ந்,
ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

### குற்றெழுத்துக்கள் 5

(குறில் - குறுகிய ஓசையுடன் வாசிக்கக்கூடியவை)
அ, இ, உ, எ, ஒ

### நெட்டெழுத்துக்கள் 7

(நெடில் - நீட்டி வாசிக்கக்கூடியவை)
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

### (3) உயிர் மெய் எழுத்துக்கள்

உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும் இணைந்து உருவாகும் எழுத்து உயிர் மெய் எழுத்து எனப்படும்.

உதாரணம்:-

க் + அ = க
ம் + ஆ = மா
ப் + இ = பி
ச் + ஈ = சீ
ட் + உ = டு
த் + ஊ = தூ

11. <u>கூட்டங்கூட்டமாக</u>:- மக்கள் <u>கூட்டங்கூட்டமாகச்</u> சென்றனர்.

12. <u>வீடுவீடாய்</u>:- பிச்சைக்காரன் <u>வீடுவீடாய்ச</u> சென்று பிச்சை கேட்டான்.

13. <u>வண்ணம்வண்ணமான</u>:- சீதாவிடம் <u>வண்ணம்வண்ணமான</u> உடைகள் இருந்தன.

14. <u>ஊர்ஊராய்</u>:- கந்தன் வேலை தேடி <u>ஊர்ஊராயத</u> திரிந்தான்.

15. <u>பூப்பூவாய</u>:- ரோசாச்செடி <u>பூப்பூவாகப்</u> பூத்திருந்தது.

16. <u>கொத்துக்கொத்தாக</u>:- மல்லிகைக் கொடியில் <u>கொத்துக் கொத்தாக</u> பூக்கள் பூத்திருந்தன.

## இரட்டைக் கிளவி (அடுக்குமொழிச் சொற்கள்)

ஒரு சொல் தனித்துப் பொருள் தராமல் அதே சொல் இரண்டு முறை இடம்பெற்று ஒரு கருத்தைப் புலப்படுத்துமாயின் அச்சொற்கூட்டம் இரட்டைக்கிளவி எனப்படும்.

| இரட்டைக்கிளவி | | உணர்த்தும் கருத்து |
|---|---|---|
| கலகல | - | சிரிப்பு |
| பளபள | - | மின்னுதல் |
| சலசல | - | நீரின் ஓசை |
| கிடுகிடு | - | அச்சம் |
| பொலபொல | - | பொழுதுவிடிதல் |
| கணகண | - | உடம்புச்சூடு |
| விண்விண் | - | வலி |
| பளார்பளார் | - | கன்னத்தில் அறைதல் |
| கடகட | - | வண்டிச்சத்தம் |
| கமகம | - | நறுமணம் |

| | | |
|---|---|---|
| கணீர்கணீர் | - | மணியொலி |
| மடமட | - | நீர்குடித்தல் |
| பளீர்பளீர் | - | மின்னல் |
| சடார்சடார் | - | பலத்தகாற்று |
| குளுகுளு | - | தென்றல், காற்று |
| நறநற | - | பற்களைக்கடித்தல் |
| வளவள | - | பேச்சு |
| குடுகுடு | - | நடத்தல் |
| கடுகடு | - | கோபம் |
| விசுக்விசுக் | - | வேகநடை |
| திருதிரு | - | விழித்தல் |
| குபீர்குபீர் | - | குருதி பாய்தல் |
| சுள்சுள் | - | வலி |
| கலீர்கலீர் | - | சலங்கை ஒலி |

**உதாரணங்கள் :-**

01. கொழுகொழு: எங்கள் பசு ஈன்ற கன்றுக்குட்டி கொழு கொழு என்றிருந்தது.
02. விசுக்விசு: அப்பா விசுக்விசுக் என்று நடந்தார்.
03. மொறுமொறு: கடையில் வாங்கியவடை மொறுமொறு என்றிருந்தது.
04. குபீர்குபீர: வாகன விபத்தில் சிக்கிய சிறுவனின் தலையிலிருந்து குபீர்குபீர எனக் குருதி பாய்ந்தது.
05. படீர்படீர: காய்ந்த விறகுச்சுள்ளிகள் படீர்படீர் என முறிந்தன.
06. தடதட: அமுதன் தடதட என மாடிப்படியில் ஏறினான்.
07. படபட: வசந்தியின் கண்கள் படபட எனத துடித்தன.
08. விடுவிடு: பாடசாலைக்கு நேரமாகியதால கண்ணன் விடுவிடுவென நடந்தான்.
09. குளுகுளு: குளுகுளு என்று தென்றல் காறறு வீசியது.

## வினைச் சொல்

ஒரு பொருளின் அசைவை உணர்த்தக்கூடிய சொல் வினைச்சொல் ஆகும். வினைச் சொற்கள் யாவும் வினையடிகளிலிருந்து பிறப்பிக்கப் படும்.

| வினையடி | வினைச் சொற்கள் |
|---|---|
| படி | படித்த, படித்து, படித்தான், படிப்பான் |
| ஓடு | ஓடிய, ஓடி, ஓடியது, ஓடுகிறான் |
| பேசு | பேசும், பேசிய, பேசுகிறது |
| பார் | பார்த்த, பார்த்து, பார்த்தது |
| விழு | விழுந்த, விழ, விழுந்து, விழுவேன் |
| சிரி | சிரித்த, சிரித்து, சிரித்தாள் |
| நட | நடந்த, நடந்து, நடந்தான் |
| வா | வந்த, வந்து, வந்தது |
| போ | போன, போய், போகிறது, போகட்டும் |
| தா | தந்த, தந்து, தந்தாள் |

**வினைச் சொல்**

**முற்றுவினை** **எச்சவினை**

**முற்றுவினை:-**

ஒரு வினையடியிலிருந்து பிறக்கும் சொல் காலத்தைக் காட்டும் எனின், அச்சொல் முற்றுப் பெற்ற வினையாகும்.

| வினையடி | முற்றுவினை | காட்டிய காலம் |
|---|---|---|
| அடி | அடித்தான்<br>அடிக்கிறான்<br>அடிப்பான் | இறந்தகாலம்<br>நிகழ்காலம்<br>எதிர்காலம் |
| சிரி | சிரித்தான்<br>சிரிக்கிறான்<br>சிரிப்பான் | இறந்தகாலம்<br>நிகழ்காலம்<br>எதிர்காலம் |
| எழு | எழுந்தேன்<br>எழுகிறேன்<br>எழுவேன் | இறந்தகாலம்<br>நிகழ்காலம்<br>எதிர்காலம் |
| வா | வந்தது<br>வருகிறது<br>வரும் | இறந்தகாலம்<br>நிகழ்காலம்<br>எதிர்காலம் |

**எச்சவினை :-**

ஒரு செயல் முற்றுப் பெறாது எஞ்சி நிற்குமாயின் அச்சொல் எச்ச வினையாகும்.

**எச்சவினை**

- **பெயரெச்சம்**
- **வினையெச்சம்**

**பெயர் எச்சம்:-**

முற்றுப் பெறாத வினையொன்று பெயர்ச் சொல்லுடன் முடிந்தால் அது பெயர் எச்சமாகும்.

உதாரணம்:- துரத்திய மாடு (துரத்தி-ய)
பாடிய சிறுமி (பாடி-ய)
மிதந்த படகு (மிதந்-த)

பழக்கவழக்கம் ..............................................................................
..............................................................................
..............................................................................

குப்பைகூளம் ..............................................................................
..............................................................................
..............................................................................

கள்ளங்கபடம் ..............................................................................
..............................................................................
..............................................................................

## பழமொழிகளும் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களும்

01. பேராசை பெருநட்டம்
*அதிக ஆசை தீமை விளைவிக்கும்.*

02. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
*ஊக்கம் உள்ளவர் உயர்வு பெறுவார்.*

03. சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.
*எதனையும் இகழ்ந்து பேசலாகாது.*

04. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
*சந்தர்ப்பத்தை தவறவிடுதல் கூடாது.*

05. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.
*அனுபவம், ஆபத்துவராமல் தடுக்கும்.*

06. ஆனைக்கும் அடிசறுக்கும்.
*பெரியோரும் சிலநேரங்களில் தவறு விடுவர்.*

07. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
*சிறுவர்களை ஆரம்பத்திலிருந்தே சீராக வளர்க்க வேண்டும்.*

08. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
*சிறுவயதுப் பழக்கம் விடமுடியாமற் தொடரும்*

09. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
*அனுபவம் இல்லாக் கல்வியால் பயனில்லை.*

10. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
*திறமையுள்ளவன் எதையும் வைத்து முன்னேறுவான்.*

11. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
*பயந்தவனுக்கு எதைக்கண்டாலும் பயம்.*

12. இளமையிற் கல்வி சிலமை மேல் எழுத்து
*இளம் வயதுப் பருவமே கல்வி கற்கச் சிறந்த பருவமாகும்.*

13. மனமுண்டானால் இடமுண்டு
*விரும்பினால் யாருக்கும் உதவி செய்யலாம்.*

14. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
*உள்ளதைக் கொண்டு திருப்திப்படுவதே நன்மை தரும்.*

15. இளங்கன்று பயம் அறியாது.
*இளமைப் பருவம் துணிவு கொண்டது.*

16. அவசரம் அல்லல் தரும்.
*அவசரமாகச் செய்யும் காரியங்கள் சிக்கலைத் தரும்.*

17. ஆழமறியாமல் காலை விடாதே.
*ஒரு விடயத்தைச் செய்யும் முன் நன்கு சிந்திக்க வேண்டும்.*

18. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
*வீண் செலவு செய்யக் கூடாது*

19. பதறாத காரியம் சிதறாது
*நிதானமாகச் சிந்தித்துச் செய்யும் காரியங்கள் நன்மையே தரும்.*

20. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்.
*பணத்தாசை யாரையும் விட்டதில்லை.*

21. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு.
*யாவருக்கும் தம்முடைய குழந்தைகள் பெறுமதியானவர்கள்.*

22. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
*எந்தவொரு விடயத்திலும் போட்டியிருந்தால் முன்னேற முடியும்.*

23. உப்பிட்டவரை உள்ளவும் நினை
*நன்றி மறப்பது கூடாது*

24. சாண் ஏற முழம் சறுக்கும்.
*ஒருபடி முன்னேற, அதையும்விட கூடுதலாக பின்னேற்றம் ஏற்படும்.*

25. இரக்கப்போனாலும் சிறக்கப் போ
*எந்தக் காரியத்தைச் செய்யப் போனாலும் சுத்தமாக போக வேண்டும்.*

26. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு
*நாம் கற்க வேண்டிய விடயங்கள் அநேகம் உள்ளன*

27. எறும்பூரக் கற்குழியும்
*சிறிய விடயமாயினும் தொடர்ந்து செய்தால் நல்ல பலனைத் தரும்*

28. அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
*விடாமுயற்சியால் எதையும் சாதிக்கலாம்.*

29. முயற்சி திருவினையாக்கும்.
*முயற்சித்தால் முன்னேற முடியும்.*

30. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
*ஒற்றுமையாக இருந்தால் பிரிவுகள் ஏற்படாது.*

31. குடிப்பது கூழ். கொப்பளிப்பது பன்னீர்.
*சிலர் வீண்பெருமை காட்டுவர்.*

32. நிறைகுடம் தளம்பாது.
*அறிவுடையவர் அடங்கியே இருப்பார்*

33. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
*முயற்சி பயன் தரும்.*

34. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
*எல்லை மீறினால் எதுவும் தீமை தரும்.*

35. கிட்டதாயின் வெட்டென மற
*கிடைக்க இயலாத ஒன்றை உடனே மறந்து விட வேண்டும்.*

36. சிறுதுளி பெருவெள்ளம்.
*சிறுகச் சிறுகச் சேமித்தால் அதிகம் சேரும்.*

37. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்.
*ஒருவரின் ஒரு நல்ல பண்பைக் கொண்டு அவரை மட்டிடலாம்.*

38. தன்வினை தன்னைச்சுடும்.

*பிறருக்குச் செய்யும் தீங்கு தனக்கே விளைவாக முடியும்.*

39. பழகப்பழகப் பாலும் புளிக்கும்.

*போகப்போக எந்தவொரு விடயமும் அலுப்புத் தட்டும்.*

## ஒத்த கருத்துச் சொற்கள்

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| அன்பு | - | நேயம் |
| அருவி | - | ஆறு |
| ஆணை | - | கட்டளை |
| களங்கம் | - | ........................ |
| புனல் | - | ........................ |
| தாரகை | - | ........................ |
| ஈகை | - | ........................ |
| உறுமால் | - | ........................ |
| கும்பி | - | ........................ |
| சாதுரியம் | - | ........................ |
| விரோதம் | - | ........................ |
| புனிதம் | - | ........................ |
| தொன்மை | - | ........................ |
| மிடி | - | ........................ |
| தனவந்தன் | - | ........................ |
| ஆதி | - | ........................ |
| அந்தம் | - | ........................ |
| யாத்திரை | - | ........................ |
| நட்பு | - | ........................ |
| சீற்றம் | - | ........................ |

| | | |
|---|---|---|
| கங்குல் | - | ........................ |
| பரவை | - | ........................ |
| சில்லு | - | ........................ |
| ஔடதம் | - | ........................ |
| சீவியம் | - | ........................ |
| அணி | - | ........................ |
| சாளரம் | - | ........................ |
| பணிவு | - | ........................ |
| ஐயம் | - | ........................ |
| வெப்பம் | - | ........................ |
| தட்பம் | - | ........................ |
| அவலட்சணம் | - | ........................ |
| இம்மை | - | ........................ |
| மறுமை | - | ........................ |
| நிசி | - | ........................ |
| மதியம் | - | ........................ |
| வைகறை | - | ........................ |
| புகழ்ச்சி | - | ........................ |
| விசாலமான | - | ........................ |
| அண்மை | - | ........................ |
| சேய்மை | - | ........................ |
| மறை | - | ........................ |
| வணிகன் | - | ........................ |
| கரி | - | ........................ |

பொல்லாங்கு - ........................

சிந்தனை - ........................

அரவம் - ........................

கர்வம் - ........................

ஆசனம் - ........................

பருவதம் - ........................

பவனம் - ........................

உண்டி - ........................

இணங்கல் - ........................

தீர்த்தம் - ........................

அம்புயம் - ........................

பிணி - ........................

கலம் - ........................

## பலசொல், ஒரே பொருள்

| | | |
|---|---|---|
| 01. | வையகம் - | பார், பூமி, அவனி, ஞாலம், உலகம், மேதினி, காசினி, குவலயம், தரணி, புவனம் |
| 02. | சந்திரன் - | திங்கள், மதி, நிலா, அம்புலி |
| 03. | சூரியன் - | ஞாயிறு, பகலவன், அருக்கன், அருணன், பரிதி, தினகரன் |
| 04. | நட்சத்திரம் - | தாரகை, உடு, விண்மீன் |
| 05. | உடம்பு - | தேகம், மெய், சரீரம், உடல், யாக்கை |
| 06. | சந்தோசம் - | மகிழ்ச்சி, உவகை, ஆனந்தம், குதூகலம், களிப்பு, இன்பம் |

07. துன்பம் - துயரம், துயர், சோகம், கவலை, இன்னல், வேதனை, அல்லல், இடர், இடையூறு, துக்கம்
08. அரசன் - மன்னன், வேந்தன், கோன், கோ, புரவலன்
09. நண்பன் - தோழன், மித்திரன், சிநேகிதன், பாங்கன்
10. களங்கம் - மாசு, குற்றம், கறை
11. தூக்கம் - துயில், நித்திரை, உறக்கம், துஞ்சல்
12. காடு - அடவி, கானகம், வனம், வனாந்தரம்
13. வீடு - இல்லம், மனை, உறையுள், அகம்
14. குழந்தை - மழலை, சேய், சிசு, மகவு
15. ஒளி - பிரகாசம், சுடர், சோதி, வெளிச்சம்
16. ஆகாயம் - விசும்பு, வானம், விண்வெளி, வான், விண்ணகம்
17. சண்டை - கலகம், யுத்தம், போர், சமர்
18. அழகு - வடிவு, வண்ணம், எழில், வனப்பு
19. உண்மை - வாய்மை, சத்தியம், மெய்
20. அன்னம் - சாதம், சோறு, அமுது, அடிசில்
21. குளம் - பொய்கை, வாவி, தடாகம்
22. மங்கை - இளம்பெண், நங்கை, தையல், மாது, பாவை, அணங்கு, வனிதை
23. ஊழியம் - தொண்டு, பணி, வேலை, சேவை
24. ஊதியம் - சம்பளம், வேதனம், கூலி, படி
25. நதி - ஆறு, அருவி, கங்கை
26. ஓடம் - தெப்பம், வள்ளம், படகு
27. ஒலி - ஓசை, சத்தம், அரவம், தொனி
28. பாம்பு - சர்ப்பம், அரவம், பணி
29. நெருப்பு - தீ, தழல், அக்கினி, அனல்
30. வயல் - கழனி, புலம், மருதநிலம், கமம்
31. வீதி - வழி, தெரு, சாலை, பாதை

32. ஆசிரியர் - குரு, ஆசான், உபாத்தியாயர்

33. பாடல் - பாட்டு, கீதம், கானம்

34. கோபம் - சீற்றம், ஆத்திரம், சினம்

35. புசி - உண், சாப்பிடு

36. பூந்தோட்டம்- பூங்கா, பூம்பொழில், நந்தவனம், பூங்காவனம், பூஞ்சோலை

37. புத்தகம் - ஏடு, நூல்

38. கடல் - ஆழி, சாகரம், பரவை

39. சிரிப்பு - நகை, முறுவல்

40. தாமரை - கமலம், அம்புயம், பங்கயம்

## ஒரு சொல் பல பொருள்

01. திங்கள் - சந்திரன், மாதம், கிழமை

02. மதி - சந்திரன், புத்தி, மதித்தல்

03. பதி - அரசன், ஊர், தலைவன்

04. அரவம் - ஓசை, பாம்பு

05. ஆழி - கடல், மோதிரம், சிங்கம்

06. இழை - ஆபரணம், நூல், பின்னுதல்

07. மெய் - உண்மை, உடம்பு

08. ஒளி - வெளிச்சம், அறிவு, மறை

09. காப்பு - வளையல், காவல்

10. கோ - அரசன், பசு

11. பாவை - பொம்மை, பெண், கண்விழி

12. தோற்றம் - காட்சி, பிறப்பு
13. பணி - தொண்டு, கட்டளை, பாம்பு
14. மடல் - காகிதம், பூவிதழ், கடிதம்
15. மறை - வேதம், இரகசியம், மறைத்தல்
16. மாலை - அந்திப்பொழுது, ஆபரணம்
17. நகை - சிரிப்பு, ஆபரணம், இகழ்ச்சி
18. கலம் - பாத்திரம், கப்பல்
19. அரை - பாதி, இடுப்பு, அரைத்தல்
20. அகம் - மனை, உள்ளம்
21. பரி - குதிரை, அன்பு
22. ஐயம் - சந்தேகம், பிச்சை
23. கவி - குரங்கு, பாட்டு, புலவன்
24. படி - படித்தல், வாசற்படி, மாடிப்படி, கூலி
25. கரி - யானை, அடுப்புக்கரி
26. உறை - கடிதவுறை, உறைதல்
27. கலை - ஆண்மான், வித்தை
28. வடு - பிஞ்சு, காயம், தழும்பு
29. முடி - தலைமயிர், மகுடம், முடித்தல்
30. அறை - வீட்டின் ஒரு பகுதி, அடித்தல்
31. வளை - புற்று, காப்பு, சங்கு

## எதிர்க்கருத்துச் சொற்கள்

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| இரவு | - | ------------------ |
| ஒளி | - | இருள் |
| ஓடு | - | ------------------ |
| ------------------ | - | நட்டம் |

| | | |
|---|---|---|
| ----------------- | - | ஒறுப்பு |
| ----------------- | - | ஆதரவு |
| ஏற்றம் | - | ----------------- |
| ----------------- | - | தெளிவு |
| உயர்வு | - | ----------------- |
| ----------------- | - | புகழ்ச்சி |
| சண்டை | - | ----------------- |
| உதயம் | - | ----------------- |
| வள்ளல் | - | ----------------- |
| இயற்கை | - | ----------------- |
| ----------------- | - | வெளியே |
| ஐயம் | - | ----------------- |
| ----------------- | - | தொன்மை (பழைமை) |
| அமாவாசை | - | ----------------- |
| தோற்றம் | - | ----------------- |
| நஞ்சு | - | ----------------- |
| ----------------- | - | களங்கம் |
| ----------------- | - | சுகம் |
| ----------------- | - | விழிப்பு |
| ----------------- | - | வெந்நீர் |
| தட்பம் | - | ----------------- |
| ஞாபகம் | - | ----------------- |
| ----------------- | - | கனி |
| காடு | - | ----------------- |

| | | |
|---|---|---|
| ------------------ | - | ஆரவாரம் (ஆர்ப்பாட்டம்) |
| ------------------ | - | நனவு |
| ------------------ | - | அநீதி |
| நியாயம் | - | ------------------ |
| ஆசை | - | ------------------ |
| ------------------ | - | அபசகுனம் |
| ------------------ | - | அபகீர்த்தி |
| ------------------ | - | விதேசம் |
| கௌரவம் | - | ------------------ |
| சப்தம் | - | ------------------ |
| அன்பு | - | ------------------ |
| ------------------ | - | அகிம்சை |
| ------------------ | - | நிரபராதி |
| ------------------ | - | அசாதாரணம் |
| ஆரோகணம் | - | ------------------ |
| ஆதரவு | - | ------------------ |
| இரகசியம் | - | ------------------ |
| இலட்சணம் | - | ------------------ |
| ------------------ | - | நிர்க்கதி |
| உருவம் | - | ------------------ |
| உபகாரம் | - | ------------------ |
| காலம் | - | ------------------ |
| ------------------ | - | அலங்கோலம் |
| ------------------ | - | அசௌகரியம் |
| சாதகம் | - | ------------------ |
| சுத்தம் | - | ------------------ |

| | | |
|---|---|---|
| ------------------ | - | அஞ்ஞானம் |
| ஆண்டான் | - | ------------------ |
| ஆத்திகன் | - | ------------------ |
| இல்லை | - | ------------------ |
| ------------------ | - | ஆதரவு |
| ------------------ | - | அரிது |
| ------------------ | - | பாராட்டு |
| ஒன்று | - | ------------------ |
| எளிமை | - | ------------------ |
| குணம் | - | ------------------ |
| அவசரம் | - | ------------------ |
| நீளம் | - | ------------------ |
| நிழல் | - | ------------------ |
| ------------------ | - | பேச்சு |
| ------------------ | - | வாட்டம் |
| ------------------ | - | கோடை |
| ------------------ | - | தூரம் |
| ------------------ | - | மறுமை |
| துரிதம் | - | ------------------ |
| ஐக்கியம் | - | ------------------ |
| கடினம் | - | இலகு |
| ------------------ | - | அநாகரிகம் |
| ------------------ | - | துர்நாற்றம் |
| ------------------ | - | அவமரியாதை |
| ------------------ | - | அவமானம் |
| ------------------ | - | சுத்தவாளி |

| | | |
|---|---|---|
| ------------------ | - | வசை |
| நெட்டை | - | ------------------ |
| விண் | - | ------------------ |
| ஏற்றுமதி | - | ------------------ |
| முன்பு | - | ------------------ |
| இன்சொல் | - | ------------------ |
| ------------------ | - | நிறைவு |
| இக்கரை | - | ------------------ |
| ------------------ | - | அசத்தியம் |
| சாத்தியம் | - | ------------------ |

## பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | அடி | - | அளத்தலின் ஒரு அலகு, காலடி |
| | அடி | - | அடித்தல் |
| 02. | பார் | - | பூமி |
| | பார் | - | பார்த்தல் |
| 03. | ஓடு | - | கூரை ஓடு |
| | ஓடு | - | ஓடுதல் |
| 04. | அளி | - | வண்டு |
| | அளி | - | கொடு (அளித்தல்) |
| 05. | அறை | - | வீட்டின் ஒரு பகுதி |
| | அறை | - | அடி (அறைந்தான்) |
| 06. | அரை | - | பாதி, இடுப்பு |
| | அரை | - | அரைத்தல் (மாவரைத்தல்) |

07. கனி - பழம்

கனி - இளகுதல் (மனம் கனிந்தான்)

08. மறை - வேதம்

மறை - ஒளித்து வை (மறைந்தது)

09. ஆடி - ஒரு மாதம், கண்ணாடி

ஆடி - ஆடினாள்

10. உடை - ஆடை

உடை - உடைத்தான்

11. இரை - உணவு

இரை - வண்டு இரைந்தது

12. ஊர் - ஒரு கிராமம்

ஊர் - ஊர்ந்தது (நகர்ந்தது)

13. கடை - பொருட்களை வாங்குமிடம்

கடை - தயிர் கடைந்தாள்

14. நாடு - தேசம்

நாடு - நாடுகிறான்

15. ஒளி - வெளிச்சம்

ஒளி - ஒளித்துவைத்தான்

16. சொல் - வார்த்தை

சொல் - சொல்லுதல்

17. இறை - கடவுள்

இறை - நீர் இறைத்தான்

18. நிறை - ஒரு பொருள், பாரம்

நிறை - நிறைந்தது

19. வழி - பாதை

வழி - கண்ணீர் வழிந்தது

| | | | |
|---|---|---|---|
| 20. | திரி | - | விளக்குத்திரி |
| | திரி | - | திரிந்தது (அலைந்தது) |
| 21. | ஆடு | - | ஒரு விலங்கு |
| | ஆடு | - | ஆடுகிறாள் |
| 22. | பாடு | - | துன்பம் |
| | பாடு | - | பாடுகிறாள் |
| 23. | படி | - | மாடிப்படி |
| | படி | - | படித்தேன் |
| 24. | குடி | - | குடிமகன் |
| | குடி | - | குடித்தான் |
| 25. | நகர் | - | ஒரு பிரதேசம் |
| | நகர் | - | நகர்ந்தது (விலகியது) |

## சொற்றொடர்களுக்குரிய தனிச்சொற்கள்

01. பத்தாண்டுகாலம் - *தசாப்தம்*

02. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு - *வெள்ளிவிழா*

03. ஐம்பதாவது ஆண்டு நிறைவு - *பொன்விழா*

04. அறுபதாவது ஆண்டு நிறைவு - *வைரவிழா, மணிவிழா*

05. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு - *பவளவிழா*

06. எண்பதாவது ஆண்டு நிறைவு - *அமுதவிழா*

07. நூறாவது ஆண்டு நிறைவு - *நிறைவு நூற்றாண்டுவிழா*

08. தாய்தந்தையரை இழந்தவன் - *அநாதை*

09. அனைத்து உடைமைகளையும் இழந்தவன் - அகதி

10. அரசாங்கத்தின் பணம், பொருள் என்பன சேமித்து வைக்குமிடம் - திறைசேரி

11. நிலத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதை - சுரங்கம்

12. போர்வீரர் மார்பில் அணியும் பாதுகாப்புக் கருவி - கவசம

13. கண்மூடித்தனமாக பணத்தை செலவு செய்பவன் - ஊதாரி

14. பல கல்வித்துறையிலும் மேற்படிப்புப்படிக்கும் இடம் - பல்கலைக்கழகம்

15. கலைநிகழ்ச்சியைப் பலரும் அறியும்படி செய்யும் நிகழ்ச்சி - அரங்கேற்றம்

16. புத்தகவடிவில் வரும் பத்திரிகை - சஞ்சிகை

17. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் தங்கியிருக்கும் இடம் - லயம்

18. கடற்கரையிலே மீன்பிடித் தொழிலாளர் தங்கியிருக்கும் இடம் - வாடி

19. மணம் புரிந்தும் பிள்ளை இல்லாத பெண் - மலடி

20. கணவனை இழந்த பெண் - விதவை, கைம்பெண்

21. ஒவ்வொரு நாளும் வெளிவரும் பத்திரிகை - தினசரி

22. மாதத்துக்கு ஒரு தடவை வெளிவரும் பத்திரிகை - மாசிகை

23. பொருளைத் தேடி எவர்க்கும் கொடாது வைத்திருப்பவன்

- *உலோபி*

24. முனிவர்கள் வாழுமிடம் - *ஆச்சிரமம், பர்ணசாலை*

25. புதிய கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்கும் கொண்டாட்டம்

- *திறப்புவிழா*

26. பொருள், பண்டம், தானியம் ஆகியவற்றைச் சேர்த்து வைக்கும் இடம் - *களஞ்சியம், பண்டகசாலை*

27. குதிரை, யானை, தேர் செலுத்துபவன் - *பாகன்*

28. ஆடு, பசு மேய்ப்பவன் - *இடையன், ஆயன்*29.

அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல்

- *அகராதி*

30. தேர், கப்பல் முதலியவற்றை முதன்முதலில் செலுத்துதல்

- *வெள்ளோட்டம்*

31. சுதந்திரம் அற்று வாழ்பவன் - *அடிமை*

32. மறறவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன்

- *சுயநலவாதி*

33. அரண்மனையில் அரச பெண்கள் வசிக்குமிடம்

- *அந்தப் புரம்*

34. சட்டி பானை வனைபவன் - *குயவன்*

35. கல்லைச் செதுக்கி சிலை வடிப்பவன் - *சிற்பி*

# கூட்டங்களைக் குறிக்கும் சொற்கள்

01. கல்லின் கூட்டம் - குவியல்

02. திறப்புக்களின் கூட்டம் - கோர்வை

03. மலைகளின் கூட்டம் - மலைத்தொடர்

04. பூக்களின் கூட்டம் - கொத்து

05. ஆடுகளின் கூட்டம் - மந்தை

06. மனிதர்களின் கூட்டம் - சனம்

07. பழங்களின் கூட்டம் - குலை

# எண் புலமை

- பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1) 6 பசுக்கள் 6 சாக்குப் புல்லை 6 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு பசு 6 சாக்குப் புல்லை தின்று முடிப்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்?

(.....................)

2) ஹரி 6.75 ரூபாய்க்கு அப்பியாசப் புத்தகங்களை வாங்கி 10 ரூபாய்த் தாள் ஒன்றை வியாபாரியிடம் கொடுத்தான். மீதிப் பணமாக ஹரிக்கு ஒரு ரூபாய் நாணயம் 1 உம், 50 சத நாணயங்கள் 3 உம் 25 சத நாணயங்கள் சிலவும் கிடைத்தன. ஹரிக்குக் கிடைத்த 25 சத நாணயங்கள் எத்தனை?

(.....................)

3) எனது நண்பர்களும் நானும் தீபாவளி வாழ்த்திதழ்களைப் பரிமாறிக் கொண்டோம். இதன் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் மற்றைய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்த்திதழை அனுப்பினோம். நாம் ஒவ்வொருவரும் பயன்படுத்திய மொத்த வாழ்த்திதழ்கள் 20 ஆகும். எனக்கு எத்தனை நண்பர்கள் உண்டு.?


(.....................)

4) இன்று திங்கட்கிழமை. நாளை மறுநாள் 16ந் தேதி. சென்ற வெள்ளிக்கிழமை கண்ணன் தனது பிறந்த தினம் நேற்று எனக் கூறினான். கண்ணன் வாரத்தின் எந்த நாளிற் பிறந்தான் எனவும் அவனின் பிறந்த தேதி எதுவெனவும் எழுதுக. (.....................)

5) மாலை 4 மணியளவில் நான் நகரிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது எனது நிழல் என்னைப் பின்தொடர்ந்து வந்ததாயின் நான் எந்தத் திசையை நோக்கி நடந்துகொண்டிருந்தேன்?


(.....................)

6) பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.





இச்சதுரமுகியில் கறுப்பு நிறம் பூசப்பட்ட பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது? ..............


07. பெட்டி ஒன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது.



ஓரங்கள் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் இப்பெட்டி செய்யப்படுகின்றது. பெட்டியைச் செய்யும் முறையைக் காட்டும்படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



◆ இவ்வரிப்படம் ஒரு வாசிகசாலையிலுள்ள புத்தகங்களின் தொகையைக் குறிக்கிறது.




8) எந்த இரு வகையான புத்தகங்கள் சமமான எண்ணிக கையைக் கொண்டுள்ளன.?

(.............................. ,..............................)

9) நாவல்களும், கவிதைப் புத்தகங்களும் ஒருமித்து சரித்திரப் புத்தகங்களிலும் பார்க்க எத்தனை மடங்கினாற் கூடுதலானவை?

(..............................)

10) சமயப் புத்தகங்களும் விஞ்ஞானப் புத்தகங்களும் வாசிகசாலையிலுள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக் கையில் எப்பின்னம் ஆகும்?

(..............................)

11) எந்த இரு வகையான புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை நாவல்களின் எண்ணிக்கைக்குச் சமமானது?

(..............................) (..............................)

12) இந்த வாசிகசாலையிலுள்ள எந்த வகையான புத்தகங் களின் எண்ணிக்கை சமயம், விஞ்ஞானம் என்பவற்றிலான புத்தகங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமானது?

(..............................)

◆ **பின்வரும் வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

13) நிமலினதும், விமலினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 41 கிலோ கிராம் ஆகும். நிமல், விமல், கமல் ஆகியோரது நிறைகளின் கூட்டுத்தொகை 67 கிலோகிராம் ஆகும். கமலின் நிறை எத்தனை கிலோகிராமாகும்.?

(.....................)

14) ஒரு பையில் 3 மஞ்சல் நிறப் பந்துகளும், 5 சிவப்பு நிறப் பந்துகளும் உள்ளன. ஒரு மஞ்சல் நிறப்பந்தினைப் பெற்றுக் கொள்வதற்குப் பையிலிருந்து ஆகக்குறைந்த எண்ணிக் கையாக எத்தனை பந்துகள் வெளியே எடுக்கப்பட வேண்டும்?

(.....................)

15) ஒரு கூட்டில் 4 மஞ்சள் வர்ணக்குருவிகளும், 6 நீல வர்ணக் குருவிகளும் சில பச்சை வர்ணக் குருவிகளும் இருந்தன. அங்கு இருந்த பச்சை வர்ணக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சல் வர்ணக் குருவிகளின் எண்ணிக்கை யிலும் கூடுதலாக இருந்தது. ஆனால் அது நீல வர்ணக் குருவிகளின் எண்ணிக்கையிலும் குறைவாகவே காணப் பட்டது. கூட்டிலிருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது? (....................)

16) ஒரு வகுப்பில் 12 சிறுவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர் அவர்களை A,B எனும் இரு குழுக்களாகப் பிரித்தார். குழு Aயிலிருந்து ஒரு சிறுவன் குழு B யிற்கு மாற்றப் பட்டால் இரு குழுக்களிலுமான எண்ணிக்கைகள் சமனாக அமையும். குழு B யிலிருந்து ஒரு சிறுவன் குழு Aயிற்கு மாற்றப்பட்டால் குழு A யிலான எண்ணிக்கை குழு B யிலான எண்ணிக்கையின் இரு மடங்காக இருக்கும். குழு Aயில் எத்தனை சிறுவர்கள் இருக்கிறார்கள்.

(....................)

♦ சிறிய ஒரு கடைக்கெனக் கொண்டு வரப்பட்ட பொருட் களினது பட்டியலொன்றின் ஒரு பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது. அப்பட்டியலில் உள்ள வெற்றிடங்களை இங்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து நிரப்புக.

*(பந்து, லீற்றர், வாளி, கிலோகிராம், கிராம், 50, மில்லிலீற்றர்)*

17) .................................................... தேயிலை.

18) .................................................... தேங்காய்கள்.

19) .................................................... சேட்டுக்கள்.

20) .................................... தேங்காயெண்ணெய்.

21) .................................................... நூல்.

♦ தரப்பட்டுள்ள உரோமன் எண்கள் ஒவ்வொன்றுக்கும் பயன்படுத்தப்படக்கூடிய எண் எதுவென அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் எண்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

22) XIV (14, 115, 94)

23) XXV (10105, 25, 15)

24) LV (105, 55, 505)

25) கணித பாடத்திலான 6 மாதாந்தச் சோதனைகளில் ஆண்டு 5 மாணவனொருவன் பெற்றுக் கொண்ட புள்ளிகள் பின்வருமாறு:

36, 44, 40, 48, 44, 52

அடுத்த மாதாந்தச் சோதனையில் அவன் பெறக்கூடிய புள்ளி யாது? (.........................)

26) ஆண்டு 5 மாணவனொருவன் மாதந்தோறும் தனது சேமிப்புக் கணக்கில் குறித்த தொகையான ரூபாய்களை வைப்புச் செய்கிறான். சில மாதங்களாக அவன் வைப்புச் செய்த ரூபாய்கள் பின்வருமாறு:

| ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை |
|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 10 | - ? - | 19 | 25 | 32 |

ஏப்ரல் மாதத்தில் அவன் வைப்புச் செய்திருக்கக்கூடிய தொகை யாது? (.........................)


27) ஒலிம்பிக் விளையாட்டுவிழா நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும். 29வது ஒலிம்பிக் விளையாட்டுவிழா இவ்வருடம் நடைபெறுகிறது. 15வது ஒலிம்பிக் விளையாட்டுவிழா எவ்வாண்டில் நடைபெற்றது?

(.........................)

28) ஒவ்வொரு திங்கட்கிழமையும் பாடசாலையின் காலைக் கூட்டததில் மாணவர் தலைவன் ஒருவன் உரைநிகழ்த துவது வழக்கம். கடைசித் திங்களன்று காலைக் கூட்டத்தில் உரைநிகழ்த்தியவன் அஜித் ஆவான். அஜித் இன்னும் ஐந்து வாரங்களில் கூட்டத்தில் மீண்டும் உரை நிகழ்த்த வேண்டும். கடைசித் திங்கட்கிழமை ஜூன் 17ம் திகதியாக இருந்திருந்தால் அடுத்து அவன் காலைக் கூட்டத்தில் உரையாற்ற வேண்டிய திகதி யாதாக இருக்கும்?

(....22....)

♦ கீழே தரப்பட்ட வரைபினை விளங்கிக் கொண்டு 29, 30, 31 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக. 1990ம் ஆண்டிலிருந்து 1997ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதி யில் குறிப்பிட்டதொரு பாடசாலையில் ஆண்டு ஐந்தில் படிக்கும் மாணவர்கள் [illegible] கழகத்தில் அங்கத்து வம் பெற்றவர்களின் தொ[illegible]



29) பெண்பிள்ளைகளிலும், ஆண்பிள்ளைகளிலும் ஒரே அளவு எண்ணிக்கையினர் அங்கத்துவம் பெற்ற ஆண்டு எது?

(.....................)

30) 1994ம் ஆண்டில் அங்கத்துவம் பெற்ற முழு மாணவர் எண்ணிக்கை எவ்வளவு?

(.....................)

31) 1998ம் ஆண்டில் அங்கத்துவம் பெறுவார்கள் என எண்ணக்கூடிய மொத்த மாணவர் தொகை எவ்வளவாக இருக்கும்?

(.....................)

♦ பின்வரும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும். அதற்கிணங்க இலக்கம் 32 - 34 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

| (A) | | | (B) | | | (C) | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| W | L | O | O | A | K | K | O | L |
| + W | L | O | - W | O | L | - O | L | W |
| 2 | 4 | 6 | 2 | 2 | 2 | 1 | 1 | 1 |


32) O இன் பெறுமதி எவ்வளவு? (...............................)

33) A இன் பெறுமதி எவ்வளவு? (...............................)


34) L இன் பெறுமதி எவ்வளவு? (...............................)

♦ 35 - 37 வரையுள்ள வினாக்களில் முதல் இரண்டு படங்களிலும் உள்ள இலக்கங்களுக்கிடையிலான தொடர்பினை அவதானித்து அறிந்து மூன்றாவது உருவப்படத்தில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான இலக்கத்தினைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.


35)
1. 28
2. 30
3. 32




36)
1. 14
2. 12
3. 10




37)
1. 64
2. 68
3. 72




♦ **38 - 39ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

38) சரவணுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும்போது சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது சரவணின் வயதை விட இருமடங்காக இருந்தபோது சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

1. 4 ஆண்டுகள்  2. 6 ஆண்டுகள்  3. 8 ஆண்டுகள

39) சரவணின் வயதைவிட சமீனின் வயது மூன்று மடங்காக இருந்த போது சரவணின் வயது எத்தனை?

1. 2 ஆண்டுகள்
2. 4 ஆண்டுகள்
3. 6 ஆண்டுகள்

◆ **40 - 41ம் வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

40) இராணி, சுதன், சீதா, இராமன் ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். இராமனைவிட 5 புள்ளிகள் கூடு தலாக இராணி பெற்றதுடன், சீதா சுதனை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தாள். இராணியும், சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?

1. சீதா 2. இராமன் 3. சுதன்

41) சீதா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 48 எனில், இராமன் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?


1. 43 2. 53 3. 56

◆ 42 - 43ம் வினாக்களின் கூடுகளில் உள்ள எண்களிக்கிடையிலான தொடர்பினை விளங்கிக் கொண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான இரண்டு எண்களையும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

42



43




# விடைகள்

1. 36 நாட்கள்
3. 4 அல்லது 20
5. மேற்கு
7. 3ம் உரு
9. 2மடங்கு
11. சரித்திரம், விஞ்ஞானம்
13. 26kg
15. 15
17. கிலோகிராம்
19. டசின்
21. பந்து
23. 25
25. 48
27. 1952இல்
29. 1992
31. 150
33. 5
35. 1
37. 1
39. 1
41. 1
43. 4 21

2. 3
4. வியாழன் 10ம் தேதி
6. நீலம்
8. கவிதை, சமயம்
10.
12. சரித்திரம்
14. 6 பந்துகள்
16. 7
18. 50
20. லீற்றர்
22. 14
24. 55
26. 14
28. ஜுலை - 23
30. 90
32. 3
34. 2
36. 3
38. 1
40. 3
42. 2 7

## விசேட பயிற்சிகள் இல : 1

01

*தொடர்புபடுத்தும் போது வரும் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.*

| | | | |
|---|---|---|---|
| (அ) | கோடுகளைப் பயன் படுத்தி இயற்கையாக உள்ளவற்றையும், செயற்கையாக உள்ளவற்றையும் கொண்டு வரைதல் | 5 | 1. கோல வடிவம் |
| ஆ) | வரைந்து கொண்ட அலங்காரம் ஒன்றை மீண்டும் மீண்டும் வரைந்து தாளை நிரப்புதல் | 1 | 2. முத்திரை பதித்தல் |
| (இ) | அனுபவங்களை மனதில் கொண்டு வரைதல் | 6 | 3. ஒட்டுச் சித்திரம் |
| (ஈ) | கடதாசி, துணித்துண்டு தாவரப்பகுதி போன்றவற்றைக் கொண்டு தள வடிவங்களை ஒட்டுதல் | 3 | 4. கொலாஜ் சித்திரம் |
| (உ) | வர்ணக் கடதாசித் துண்டுகளைக் கிழித்து சுதந்திரமாக ஒன்றை ஒட்டுதல் | 4 | 5. கோட்டுச் சித்திரம் |
| | | | 6. உணர்வுச் சித்திரம் |

02

***ஸ்டென்சில் அலங்காரம் ஒன்றைச் செய்வதற்கு ஒரு மாணவன் செய்ய வேண்டிய படிமுறைகள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கைக் கண்டு பிடித்து அடைப்புக்குள் எழுதுக.***

1) சித்திரத்தை உலர வைத்தல் (..4.......)

2) அச்சிலிருந்து 4 அல்லது 5 சென்றி மீற்றர் உயரத்தில் சீப்பைக் குறுக்காகப் பிடித்துக் கொண்டு தூரிகையைத் தேய்த்தல். (..3.......)

3) தூரிகையைச் சாயத்தில் தேய்த்தல். (...........)

4) கோழிச்சாயம் சீப்பு, பழைய பற்றூரிகை, கடதாசி அட்டை பின்னணிக்குப் பொருத் தமான தாள் என்பவற்றைத் தேடிக் கொள்ளல். (...........)

5) வரைதற்தாளில் அச்சை வைத்து, வரைதல் ஊசியால் அசையாமல் இணைத்துக் கொள்ளல் (...........)

6) போதியளவு சாயம் தெளிக்கப்பட்ட பின்பு நிறுத்தல் (...........)

03

***ஒரு மாணவனால் செய்யப்பட்ட ஆக்கச் செயற்பாடு ஒழுங்கு மாறித் தரப்பட்டுள்ளது. அவற்றைச் சரியான முறை யில் ஒழுங்குபடுத்தும் போது வரும் எண்ணை வெற்றுக் கூட்டினுள் எழுதுக.***


1. ஆக்கத்திற்கு அவசியமான முறையில் பொருத்த மானவாறு நிறங்களைத் தீர்மானித்தல். [4]
2. பசையால் ஒட்டுதல். [5]
3. பின்னணிக்குப் பொருத்தமான தாள் நிறக்கடதா சித்தாள் என்பவற்றை சேகரித்துக் கொள்ளல். [1]
4. நிறக்கடதாசிகளைச் சிறு துண்டுகளாகக் கிழித்துக் கொள்ளல் [2]
5. தேவையான உருவத்தை அமைத்துக் கொள்ளல். [3]

04)

***பஞ்சுப் பறவை ஒன்றை ஆக்குவதற்கான அறிவுறுத்தல்களும் அவற்றிற்கான படங்களும் தரப்பட்டுள்ளன.***


***அறிவுறுத்தல்களுக்கு உரிய படங்களைக் கண்டு பிடித்து அதற்கு கீழேயுள்ள அடைப்பினுள் அதன் இலக்கத்தை எழுதுக.***


1. கைக்குட்டை அளவு வடிவான துணித்துண்டொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
2. துணித்துண்டை எதிர்மூலம் பக்கமாக மடித்து நூலோடுங்கள்.
3. மறுபுறமாகப் புரட்டி பஞ்சை நிரப்பிய பின் தூவாரத்தினூடாக கோழி இறகுகள் சிலவற்றைப் புகுத்தி மூடிக் கொள்ளுங்கள்.
4. வாலுக்கு எதிர்முனையை நூலால் கட்டித் தலைப்பகுதியை ஆக்கி கண்ணைக் குறியுங்கள்.
5. எலுமிச்சை முள்போன்ற ஒன்றினால் சொண்டையும், சுருட்டிய துணித்துண்டினால் காலையும் இணைத்துத் தைத்துக் கொள்ளுங்கள்.
6. தொங்க விடுவதற்கு ஏற்றவாறு பறவையின் முதுகுப்புறமாக நூலினால் கொழுவி ஒன்றை அமையுங்கள்.





05

நிறக்கடதாசிகளை மடித்து வெட்டுவதன் மூலம் பெறப்படும் ஆக்கங்கள் சில முதலாம் உருவில் உள்ளன. மடிப்பை விரிக்கும் போது வரும் உருக்களை தரப்பட்ட வெற்றுக்கூட்டுக்குள் வரைக.

1


2



3


4


06

***கீழே காணப்படக்கூடிய உருக்களை அவதானித்து புள்ளிக்கோட்டில் விடைகளை எழுதுக***


**A**




1. இவ்வுருவின் பெயர் என்ன? ........................................

2. இது அசைவதற்கு எதனைச்சுழற்ற வேண்டும்? ........................................

**B**




1. இவ்விளையாட்டு உரு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்? ........................................

2. A B C DE என்பவற்றைப் பெயரிடுக.

A ..................  B......................

C ....................  D.......................

E....................

3) ♦ பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| 1. சிரத்தை .............................. | 2. சரம் .............................. |
| 3. பீதி .............................. | 4. கைமாறு .............................. |
| 5. கலி .............................. | 6. துட்டன் .............................. |
| 7. அபயம் .............................. | 8. அபாயம் .............................. |
| 9. சீவன் .............................. | 10. வையகம் .............................. |
| 11. தாமதம் .............................. | 12. கலசம் .............................. |

4) ♦ பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| 1. பலம் .............................. | 2. மலை .............................. |
| 3. ஞானம் .............................. | 4. சௌகரியம் .............................. |
| 5. சம்மதம் .............................. | 6. இணக்கம் .............................. |
| 7. நீட்டு .............................. | 8. வாட்டம் .............................. |
| 9. பண்டிதர் .............................. | 10. சோடி .............................. |
| 11. ஈதல் .............................. | 12. குரு .............................. |

5) ♦ பின்வரும் சொற்களுக்கு எதிர்பாற் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| 1. ஆடவர் .............................. | 2. உழவன் .............................. |
| 3. பாங்கியர் .............................. | 4. மைந்தன் .............................. |
| 5. உத்தமி .............................. | 6. நங்கை .............................. |
| 7. அடியவன் .............................. | 8. கள்வன் .............................. |
| 9. வீரன் .............................. | 10. வாலை .............................. |
| 11. தட்டான் .............................. | 12. ஊமையன் .............................. |

6) ♦ கீழே தரப்படுகின்ற பந்தியில் உள்ள விடயம் பூரணமாக விளங்கும் வகையில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்ட சொற்களிலிருந்து கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுக.

பாடசாலை விடுமுறைக்குப் பின் நாங்கள் நல்ல

1. 1. சோகமாக 2. உற்சாகமாக 3. சோம்பலாக இருந்தோம்.

விடுமுறையைக் கழிப்பதற்கு எங்கேனும்

2. 1. பிரயாணம் 2. ஊர்வலம் 3. சுற்றுலா

செல்லக் கிடைத்தால் எவ்வளவு

3. 1. நன்றாக 2. அழகாக 3. சிறப்பாக

இருக்கும் என்று நாங்கள்

4 1. பிரார்த்தித்தோம் 2. யோசித்தோம் 3. ஆசைப்பட்டோம்

எங்கள் ஆசைப்படியே அப்பா எங்களை தெஹிவளையிலுள்ள

5. 1. பூங்காவுக்கு 2. நூதனசாலக்கு 3. மிருகக்காட்சிச் சாலைக்கு

அழைத்துச் சென்றார். அங்கே விதம்விதமான

6 1. மிருகங்கள் 2. பறவைகள் 3. விலங்குகள்

காணப்பட்டன. இவற்றையெல்லாம்

7. 1. பராமரிப்பதற்கு 2. பார்ப்பதற்கு 3. இரசிப்பதற்கு

மிகவும் செலவாகுமே என்று நான் அப்பாவிடம் கேட்டேன். அதற்கு அப்பா இவற்றை

8. 1. காட்ட 2. பார்க்க 3. படம் எடுக்க

வருகின்ற மக்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணத்தைக் கொண்டே அவை கவனிக்கப்படுவதாகச் சொன்னார். கரடிகள் வைக்கப்பட்டிருந்த

9 1.பாதாளக்குகை 2 மரப்பொந்து 3. நீர்த்தேக்கம்

ஒன்றை நாங்கள் பார்வையிட்ட போது அது எங்களைப் பார்த்து


10 1. உறுமியது 2. கத்தியது 3. கர்ச்சித்தது

அதைக் கண்டு என் தம்பி

11 1. சிரித்து 2. பயந்து 3. அழுது
கத்தினான்

## விசேட பயிற்சிகள் இல : 02

01







1. மேலுள்ள வரைபு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

   ..............................................

2. குறைந்தளவு பொம்மைகளை உற்பத்தி செய்த நிறுவனம் எது?

   ..............................................

3. மெக்கலம் கம்பனி உற்பத்தி செய்த பொம்மைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

   7 ..............................................


4. சவேரியர் நிறுவனம் ஒரு பொம்மையின் விலையை 75ரூபா படி சந்தைக்கு விட்டால் அதன் மூலம் பெறும் வருமானம் எவ்வளவு?

   ..............................................

5 ஜெயா கம்பனி உற்பத்தி செய்த பொம்மைகளின எண்ணிக்கையை விட சிவராசா நிறுவனம் எத்தனை பொம்மைகளை குறைவாக உற்பத்தி செய்தன?

   5 ..............................................

⌘ *மரக்கறித் தோட்டமொன்றில் பறிக்கப்பட்ட மரக்கறி வகைகளின் விபரம்*




1. மிக அதிகமாகப் பறிக்கப்பட்ட மரக்கறி எது?

   ........தக்காளி........

2. பறிக்கப்பட்ட கோவாவில் நிறை பச்சை மிளகாயைவிட எத்தனை மடங்கு?

   ....8 மடங்கு....

3. பறிக்கப்பட்ட கோவாவின் 50kg விற்கப்பட்ட பின்பு மேலும் 50kg தக்காளி பறிக்கப்பட்டது எனின் கோவாவின் நிறையை விட தக்காளியின் நிறை எவ்வளவால் கூட?

   ..................................

4. பறிக்கப்பட்டுள்ள முழு மரக்கறி வகைகளுள் கரட் எத்தனை பங்காகும்?

   ..................................

6. A,B ஆகிய இரு நகரங்களுக்கிடையிலான தூரம் 150km ஆகும். A நகரிலிருந்து B நகரத்துக்குப் பயணத்தை ஆரம்பித்த வசு வண்டி 1 மணித்தியாலத்துக்கு 50km வேகத்திலும், B நகரிலிருந்து A நகரத்துக்குப் பயணத்தை ஆரம்பித்த வசுவண்டி மணிக்கு 40km வேகத்திலும் பயணம் செய்கின்றன. $1\frac{1}{2}$ மணித்தியாலத்துக்குப் பின்னர் இரு வசுவண்டிகளுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

........................

7. ஒரு வாங்கில் பெண்பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்திலிருந்து கணக்கிடும் போது மலீகா 12வதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்திலிருந்து பார்க்கும்போது அவள் 5வதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண்பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?

........................

8. ஒரு பெட்டியில் சிவப்பு நிற பந்துகள் இரண்டும், நீலநிற பந்துகள் மூன்றும், மஞ்சள் நிற பந்துகள் நான்கும் இருந்தன. ஒரு பிள்ளை இரு கண்களையும் மூடிக்கொண்டு ஒவ்வொரு பந்தாக வெளியே எடுக்கிறது.

1. கட்டாயமாக அப்பிள்ளைக்கு சிவப்புநிற பந்து எத்தனையாவது சந்தர்ப்பத்தில் கிடைக்கும்?

........................

2. கட்டாயமாக அப்பிள்ளைக்கு மஞ்சள்நிற பந்து அல்லது நீல நிற பந்து எத்தனையாவது சந்தர்ப்பத்தில் கிடைக்கும்?

........................

3. முதலில் எடுத்த சிவப்புப் பந்தை வெளியே வைத்த பின் மீண்டும் கையை விட்டால் கட்டாயமாக அப்பிள்ளைக்கு மஞ்சள் பந்து ஒன்று எத்தனையாவது சந்தர்ப்பத்தில் கிடைக்கும்?

........................

9. தோரணம் ஒன்றில் முறையே நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், ஊதா என்ற நிற ஒழுங்கில் மின்குமிழ்கள் கொண்ட கொடி ஒன்று இரண்டு மின் கம்பங்களுக்கிடையில் மாட்டப்பட்டுள்ளது. அதில் உள்ள 33வது மின்குமிழின் நிறம் என்ன?

........................

10. தினமொன்றுக்கு 8 மணித்தியாலம் வேலை செய்யும் ஒரு மனிதன் 10 நாட்களில் வெட்டிய வாய்க்காலை 2 நாட்களில் வெட்டி முடிக்க, அம்மனிதனைப் போல எத்தனை பேர் தேவைப்படுவர்?

........................

11. இன்னும் 2 வருடங்களில் எனதும், என் அப்பாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 60 ஆவதோடு, என் அப்பாவின் வயது என் வயதின் 5 மடங்காகிவிடும். இப்போது என் வயது 8 எனின் அப்பாவின் வயது என்ன?

........................

12. இப்போது மாலாவின் வயது சீலாவின் வயதின் $\frac{1}{3}$ பங்காகும். 6 வருடங்களுக்கு முன்னர் மாலாவின் வயது 4 எனின், இப்போது

1. மாலாவின் வயது என்ன? ........................
2. சீலாவின் வயது என்ன? ........................

13. சாந்தியினதும் அவள் அம்மாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 55 ஆகும். சாந்தியின் வயதைப் போன்று 4 மடங்கு வயதில் அவள் அம்மா இருக்கிறார் எனில், சாந்தியின் வயது என்ன?

........................

14. கமல் அமலைவிட 6 வருடங்கள் மூத்தவன். சலீம் அமலை விட 10 வருடங்கள் இளையவன். இன்னும் 5 வருடங்களில் அமலின் வயது 25 வருடங்கள் எனின், இப்போது

1. கமலின் வயது என்ன? ........................
2. சலீமின் வயது என்ன? ........................

15. இப்போது சுதாவின் வயது 12 வருடங்களாகும். இன்னும் 3 வருடங்களில் சுதாகரின் வயது சுதாவின் வயதைப் போன்று இரண்டு மடங்காகும். சுதாவினதும் சுதாகரினதும் இப்போதுள்ள வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

........................

1. ரவி பணம் செலவு செய்யாத நாள் எது?

.........................................................................

2. குமார் சமமான அளவு பணம் செலவழித்த நாட்கள் எவை?

..............................................................

3. இருவரும் சமமான அளவு பணம் செலவு செய்த நாள் எது?

...........................................................

4. ரவி செலவு செய்த முழுத் தொகையும் எவ்வளவு?

.....................................................

5. திங்கட்கிழமை இருவரும் செலவு செய்த பணத்தொகையின் வித்தியாசம் எவ்வளவு?

.........................................................................

6. இருவரும் செலவு செய்த தொகை 35 ரூபாவாக உள்ள தினம் எது?

...........................................

325

800 → 40

0 0

தேசம்
International Tamil Magazine
www.thesamnet.co.uk
P.Box. 35806
London
E11 3JX. UK.

அன்புடன் மாணவ, மாணவிகளே!

தற்போது நீங்கள் மிகவும் கடினமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். அதற்கு மத்தியிலும் உங்கள் கல்வியை நீங்கள் கைவிடாமல் தொடர்வது மிக மிக அவசியம். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது முதுமொழி மட்டுமல்ல, உண்மையும்கூட. ஒரு சமூகத்தின் அத்திவாரம் அந்த சமூகத்தின் இளம் தலை முறையினருக்கு வழங்கப்படும் கல்வி. அது பரீட்சையுடன் மட்டும் முடிந்து விடாது.

இடம்பெயர்ந்து வாழும் உங்கள் உறவுகளாகிய நாம் நீங்கள் எதிர் கொள்ளும் மிகத் துயரமான வாழ்வை எண்ணி வேதனைப்படுகின்றோம். சிலசமயம் குற்ற உணர்வுகளுக்கும் உள்ளாகின்றோம். அக்குற்ற உணர்வுகளி லிருந்து எம்மை சற்று விடுவித்துக் கொள்ள உங்களுக்கு வழங்கும் உதவிகள் ஆறுதலாக இருக்கலாம் என நினைக்கின்றோம். அந்த வகையில் நீங்கள் எதிர்நோக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாக: இந்த வழிகாட்டிப் புத்தகங்களும், மாதிரிவினாத்தாள்களும் உங்களுக்கு உதவும் என்ற அடிப்படை யில் இலங்கையில் சிந்தனை வட்டத்துடன் இணைந்து இவற்றை உங்களுக்கு வழங்குகின்றோம். உங்கள் பரீட்சைக்காக இந்த வழிகாட்டிப புத்தகங்களும், மாதிரிவினாத்தாள்களும் உதவுமாக இருப்பின் அது எமக்கு மிகுந்த மகிழ்ச்சி யைக் கொடுக்கும்.

த. ஜெயபாலன்
ஆசிரியர் குழு, தேசம்நெற்
2009.04.20

---

**இணை அனுசரணையாளர்கள்:**

முத்திய இலங்கை முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றியம்
அகிலன் பவுண்டேஷன் – ஐக்கிய இராச்சியம்

---

## சிந்தனை வட்டம்

'நாளைய சந்ததியின் இன்றைய சக்தி'
14, உடத்தலவின்ன மடிகே,
உடத்தலவின்ன - 20802

ISBN: 978-955-1779-23-8